# விழுப்புரம் நகராட்சி

**2022–ஆம் ஆண்டு ஜனவரி** மாதம் 25**–ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை** 10.35 மணிக்கு **விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில்** நடைபெற்ற "**சாதாரண கூட்ட**" நடவடிக்கைகள்.

**முன்னிலை:–** **போ.வி.சுரேந்திர ஷா,** எம்.ஏ.,
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**

## மன்றப்பொருள்

**1.** இந்நகராட்சி ஆணையாளர் மற்றும் பொறியாளர் ஆகியோரது டிசம்பர் 2021 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

பதிவு செய்யலாம்.

**2.** விழுப்புரம் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட ஆட்சியரின் முகாம் அலுவலகம் முதல் பின்புற கேட் வரை உள்ள சாலையானது முக்கிய அணுகு சாலையாகவும், மேலும் பின்புறம் பகுதியில் 1).VAO நகர் 2).குழந்தைவேல் நகர் 3). E.S கார்டன் 4).விவேகானந்தர் நகர் 5).மாம்பழப்பட்டு ரோடு 6).கமலா கண்ணப்பன் நகர் பகுதியில் உள்ள பொதுமக்களாலும், மேலும் மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் உள்ள அரசு அலுவலகங்களின் பணியாற்றும் பணியாளர்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது முகாம் அலுவலக கடித ந.க.எண்.15/2021, நாள்.18.10.2021 கடிதத்தில் மாவட்ட முகாம் அலுவலகம் முதல் பின்புற கேட் வரை படு மோசமான சாலையினை உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு சீரமைத்து தருமாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி சாலையான மாவட்ட ஆட்சித்தலைவர் முகாம் அலுவலகம் முதல் பின்புறம் Gate வரை தெற்கு பகுதியில் தார்சாலை அமைக்க ரூ.16.80 இலட்சம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் முகாம் அலுவலகம் முதல் பின்புறம் Gate வரை வடக்கு பகுதியில் தார்சாலை அமைக்க ரூ.22.80 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தார்சாலைகள் அமைத்திட ரூ.16.80 இலட்சம் மற்றும் ரூ.22.80 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்திட, அதற்கான நிதியை மாவட்ட கனிமவள நிதியிலிருந்து (PMKKKY Scheme) நிதி ஒதுக்கீடு செய்து தர மாவட்ட ஆட்சியருக்கு பிரேரணை அனுப்பி வைக்கலாம்.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம். (7753/2018/இ1)

**3.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் உள்ள நடைபாதை மற்றும் பூங்காவினை விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் நேரடி ஆய்வு மற்றும் அறிவுறுத்தலின்படி மேற்படி பூங்காவினை மேம்படுத்திட வேண்டியுள்ளது. எனவே, பூங்காவினை மேம்படுத்திட ரூ.250.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பகுதியில் உள்ள பூங்காவினை மேம்படுத்தும் பணிக்கு ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில் AMRUT 2.0 நிதி 2021-22-ன் கீழ் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு AMRUT 2.0 நிதி 2021-22-ன் கீழ் மேற்கொள்ளவும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணை சமர்ப்பிக்கலாம்.

(6120/2021/இ1)

**4.** விழுப்புரம் நகராட்சி பகுதிகள் மற்றும் நகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள ஊராட்சி பகுதிகளில் வடகிழக்கு பருவ மழை காரணமாக மழைநீர் சூழ்ந்துள்ள பகுதிகளில் மின் மோட்டார்கள் மூலம் மழைநீரை வெளியேற்றப்பட்டது. இந்நிலையில் பின்வரும் 1).இராஜீவ் காந்தி நகர் 2).KK ரோடு அண்ணா நகர் 3).KK ரோடு குறிச்சி குட்டை 4).நாராயணன் நகர் MGR தெரு 5).நெடுஞ்சாலை நகர் 6).எழில் நகர் 7).NSK நகர் 8).NGGO காலனி 9).நடேசன் நகர் 10).JJ நகர் (ம) மகாராஜபுரம் ஆஸ்பிட்டல் 11).லிங்கா நகர் 12).ஜெகநாதன் நகர் 13).பாண்டியன் நகர் 14).மகாதேவன் நகர் 15).பூவராகவன் நகர் ஆகிய பகுதிகளில் புதியதாக மழைநீர் வடிகால் அமைக்க வேண்டியுள்ளது. மேற்கண்ட இடங்களில் நிரந்தரமாக புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.183.50 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி உடனடியாக புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.183.50 இலட்சம் மதிப்பீட்டில் மூலதன மானிய நிதி (CGF) 2021-22-ன் கீழ் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வழங்க கோரி பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிக்கு மூலதன மானிய நிதி (CGF) 2021-22-ன் கீழ் மேற்கொள்ளவும் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணை அனுப்பி வைக்கலாம்.

(5144/2019/இ1)

**5.** இந்நகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண் TN 32 D 3817 மிகவும் பழுதடைந்த காரணத்தினால் மேற்படி வாகனத்தை (மகேந்திரா பொலிரோ) பழுது நீக்கம் செய்திட சங்கலாயா மோட்டார்ஸ் (SCHANGALAYA MOTORS) நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரி வரப்பெற்றதை தொடர்ந்து, பணியின் அவசரம் கருதி மேற்கண்ட நிறுவனத்திற்கு வாகனம் பழுது நீக்கம் செய்ததற்கு ரூ.1,16,343/-ஐ Sec-15-ன் கீழ் வருவாய் நிதியின் கீழ் வழங்கியதை மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

பதிவு செய்திடலாம். (5429/2021/இ1)

**6.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.20557/2020/இ3, நாள்.15.12.2020 கடிதத்தில் விழுப்புரம் நகராட்சிக்கு சிறப்பு சாலைகள் திட்டம் (SRP 2020-21) கீழ் ரூ.400.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப் பணிகள் அனுமதிக்கப்பட்டது. மேலும் மேற்கண்ட பணிக்கு நிதி ஒதுக்கீடாக (Fund Pattern) TUFIDCO நிறுவனத்தின் மூலம் கடன் ரூ.360.00 இலட்சமும் மற்றும் நகராட்சி பங்கு தொகை ரூ.40.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.400.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண்.23655/2020/DO1, நாள்.22.12.2020 கடிதத்தில் நான்கு சிப்பங்களுக்கான சாலை பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO), சென்னை அவர்களின் கடித எண்.TUFIDCO/SRP/1551/AM(M)/2021, நாள்.14.09.2021 கடிதத்தில் சிறப்பு சாலைகள் திட்டத்தில் ரூ.180.00 இலட்சம் கடன் தொகை முதல் தவணையாக விடுவித்து இந்நகராட்சிக்கு வரப்பெற்றது.

இந்நிலையில் நகராட்சியினுடைய நிதி நிலைமை திருப்திகரமாக இல்லாத காரணத்தினாலும், மேற்படி TUFIDCO நிறுவனத்திற்கு அசல் மற்றும் வட்டி தொகை செலுத்துவதற்கு மிகவும் சிரமமாக இருக்கும் என்பதை பார்வை 4-ல் காணும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது காணொளி காட்சி ஆய்வின் போது இந்நகராட்சியின் நிதி நிலைமையை தெரிவிக்கப்பட்டது. மேலும் விழுப்புரம் நகராட்சியில் அனுமதியற்ற மனை பிரிவு வளர்ச்சி கட்டணம் ரூ.3.14 கோடி தற்போது வைப்பு நிதியில் உள்ளது. மேற்கண்ட அனுமதியற்ற மனை பிரிவு வளர்ச்சி கட்டணத்தில் ரூ.180.00 இலட்சத்தினை செலவினம் மேற்கொள்ள திருத்திய நிதி ஒதுக்கீடு அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வழியாக கருத்துரு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

அனுமதிக்கலாம். (4070/2020/இ1)

**7.** விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2021-22-ன் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு பணிகள் மேற்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. விவரம் வருமாறு.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கீழ்பெரும்பாக்கம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பகுதியில் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் (Type-III) அமைக்கும் பணி | 250.00 |
| 2 | மகாராஜபுரம் பகுதியில் நவீன தகன மேடை அமைக்கும் பணி | 148.50 |

மேற்கண்ட பணிகளுக்கு உரிய நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொழில்நுட்ப அனுமதியில் வடிவமைப்பு மற்றும் ஒப்புதல் (Structural Design and Drawing) அரசு பொறியியல் கல்லூரியில் இருந்து பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட இரண்டு பணிகளுக்கு Structural Design and Drawing வழங்கிடவும், மேலும் அதற்குண்டான கேட்பு தொகை அனுப்பி வைக்குமாறு முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, சேலம் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதில், அதற்கான கட்டணம் ரூ.2,36,000/- (GST உட்பட) செலுத்துமாறு கடிதம் வரப்பெற்றதை தொடர்ந்து, மேற்கண்ட தொகை செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தொகை செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(6123/2021/இ1)

**8.** விழுப்புரம் நகராட்சி சேவியர் காலனி பகுதிகளில் சேகரமாகும் மழைநீர் செல்வதற்காக மழைநீர் வடிகால் கால்வாய் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் இம்மழைநீர் கால்வாயினை கடந்தவுடன் இரயில்வே பகுதி பாதை (Track) அமைந்துள்ளது. மேற்கண்ட பகுதியில் அமைந்துள்ள மழைநீர் வடிகால் கால்வாய் மீது Cover Slab அமைக்கும் பணிக்கு ரூ.4.00 இலட்சத்திற்கு உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி பணிக்கு அனுமதியும், செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(727/2021/இ1)

**9.** விழுப்புரம் நகராட்சி புறவழிச்சாலையில் பழுதடைந்த குடிநீர் பிரதான குழாயினை அகற்றிவிட்டு, புதிய குடிநீர் பிரதான குழாயினை பதிக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.8.20 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15-ன் கீழ் பணியினை செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.K.ராஜா, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு பட்டியலுக்கான தொகை ரூ.8,11,038/-ஐ குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(6644/2021/இ2)

**10.** விழுப்புரம் நகராட்சி எல்லீஸ்சத்திரம் தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 50HP Turbine Motor-ல் 240mm dia குழாய்கள் பொருத்தும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்தில் தயாரிக்கப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15-ன் கீழ் பணியினை செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ஸ்ரீ அய்யனார் கன்ஸ்ட்ரக்ஷன் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு பட்டியலுக்கான தொகை ரூ.98,289/-ஐ குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் செலவினம் மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு:-**</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(2573/2021/இ2)

**11.** விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.01 VAO நகர் பகுதியில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் பணியினை 15-வது நிதிக்குழு மானியம் 2020-21-ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கு உரிய நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட தொழில்நுட்ப அனுமதியில் வடிவமைப்பு மற்றும் ஒப்புதல் (Structural Design and Drawing) அரசு பொறியியல் கல்லூரியில் இருந்து பெற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணிக்கு Structural Design and Drawing வழங்கிடவும், மேலும் அதற்குண்டான கேட்பு தொகை அனுப்பி வைக்குமாறு முதல்வர், அரசு பொறியியல் கல்லூரி, சேலம் அவர்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டதில், அதற்கான கட்டணம் ரூ.1,18,000/- (GST உட்பட) செலுத்துமாறு அரசு பொறியியல் கல்லூரி, சேலம் அவர்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட தொகை செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை 15-வது நிதிக்குழு மானிய நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(3364/2020/இ2)

**12.** விழுப்புரம் நகராட்சி கொரோனா வைரஸ் மற்றும் ஒமிக்ரான் வைரஸ், தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள ஏதுவாக கிருமி நாசினிப்பொருட்கள் மற்றும் பொது சுகாதார/பொறியியற்பிரிவு தளவாட பொருட்கள் கீழ்கண்ட விவரப்படி விநியோகம் செய்திட 10.01.2022 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு

| வ.எண். | விவரம் | Qty | Company Name | | |
|---|---|---|---|---|---|
| | | | M/s SUDAR AGENCIES , 18,First floor, Agrahara street, Tindivanam road Marakkanam-604303 | M/s SHRI HARI AGENCIES Sudar illam, Vao Nagar, Valudareddy, Villupuram-605401 | M/s SAI BABA Construction , 143/B, S.I.S Nagar salamedu, Villupuram-605104 |
| | | | விலை ரூ (Exclusive of .GST) | விலை ரூ (Exclusive of .GST) | விலை ரூ (Exclusive of .GST) |
| 1 | Hand சானிடைசர் | 1 Lit | 497.00 | 498.00 | 500.00 |
| 2 | லைசால் (Lysol Cented ( Surface Cleaner) | 1Lit | 198.00 | 199.00 | 199.00 |
| 3 | சோடியம் ஹைப்போ குளோரைடு Solution 5% | 1 Lit | 6.00 | 7.00 | 7.00 |
| 4 | பிளீச்சிங் பவுடர்(Clorine 34%) 25 Kg Bag | 1 Kg | 40.00 | 44.00 | 45.00 |
| 5 | PPE KIT Full Set ( Coat, Gloves, Goggles, Mask and Cap ) | Set | 271.00 | 272.00 | 272.00 |
| 6 | மாஸ்க் ( 3Ply) | 1 No | 3.90 | 3.9 | 3.9 |
| 7 | மாஸ்க் ( N-95) | 1 No | 21.00 | 21.00 | 21.00 |
| 8 | கையுறை (Washable) Cotton Synthetic Mixed | 1 Set | 60.00 | 62.00 | 62.00 |
| 9 | காலுறை( Gumboots) | 1 Set | 429.00 | 431.00 | 435.00 |
| 10 | ஒளிரும் சட்டை (Reflector Jacket) | 1 No | 429.00 | 431.00 | 434.00 |
| 11 | Brush (தேங்காய் நார்) மற்றும் குச்சி | 1 No | 20.00 | 21.00 | 21.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | துடப்பம் | 1 No | 20.00 | 21.00 | 21.00 |
| 13 | இரும்பு பாண்டு(பெரியது) | 1 No | 110.00 | 112.00 | 112.00 |
| 14 | வெட்ரூம் (பட்டை) பெரியது | 1 No | 90.00 | 92.00 | 92.00 |
| 15 | உளி(பெரியது) | 1 No | 150.00 | 152.00 | 152.00 |
| 16 | சுத்தி (10 பவுண்டு) | 1 No | 720.00 | 723.00 | 725.00 |
| 17 | இரும்பு வாளி | 1 No | 200.00 | 202.00 | 202.00 |
| 18 | வால்வு Rope Size-1/4,1/2 &3/4 | 1 No | 150.00 | 152.00 | 152.00 |
| 19 | கிரீஸ் (250Gm) | 1 Packet | 110.00 | 112.00 | 112.00 |
| 20 | சணல் | 1 Bundle | 170.00 | 172.00 | 172.00 |
| 21 | Oil Soap (1000ml) | 1 No | 165.00 | 167.00 | 168.00 |

<u>அலுவலக குறிப்பு:-</u>

மேற்கண்ட அனைத்து இனங்களிலும் அரசு நிர்ணயம் செய்த விலைக்குட்பட்டும், குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s SUDAR AGENCIES, 18, First floor, Agrahara street, Tindivanam Road, Marakkanam-604303 என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். மேற்கண்ட பணி முக்கியதுவம் கருதி பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.+

(8735/2021/எச்1)

**13.** இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் கீழ் காணும் கடைகளை நகர்மன்ற தீர்மான எண்.2206, நாள்.31.08.2021-ல் விழுப்புரம் நகராட்சியின் நிதி ஆதாரம் உருவாக்கும் பொருட்டு பழைய பேருந்து நிலையத்தில் பழுதடைந்து கீலகமான நிலையிலிருந்த கடைகளை அகற்றியும் மற்றும் கிழக்கு பகுதியில் உள்ள 10 பூக்கடைகளை காலி செய்து விட்டு அந்த இடத்திலும் தரை தளம் மற்றும் முதல் தளம்மாக புதியதாக கடைகள் கட்ட ஒப்புதல் பெறப்பட்டது.

இந்நிலையில் புதியதாக கடைகள் கட்ட 10 பூக்கடைகளை காலி செய்ய அறிவிப்பு வழங்கிய பொழுது பூக்கடை குத்தகைதாரர்கள் புதியதாக கட்டிடம் கட்டி முடிக்கும் வரை தற்காலிகமாக பழைய பேருந்து நிலையத்தில் மாற்று இடம் ஒதுக்கி வழங்க கோரிக்கை வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து புதியதாக கடைகள் கட்டப்படும் இடத்தின் அருகில் போதிய இடம் இல்லாததால் புதியதாக கடை கட்டி முடிக்கப்படும் காலம் வரை மட்டுமே தற்காலிமாக 6 கடைகள் நடத்தி கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.

| வ.எண் | வரி வதிப்பு எண் | பெயர் | இடம் | கடை எண் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | 044/96 | RAJAGOPAL. C | பழைய பேருந்து நிலையம் | 2 | தற்காலிமாக கடை வைத்து நடத்த அனுமதி அளிக்கப்பட்டது |
| 2 | 044/97 | SEKAR.K | பழைய பேருந்து நிலையம் | 3 | போதிய இடம் இல்லாத்தால் கடை ஒதுக்கீடு செய்து வழங்கப்படவில்லை. |
| 3 | 044/98 | KRISHNAMOORTHY. G | பழைய பேருந்து நிலையம் | 4 | தற்காலிமாக கடை வைத்து நடத்த அனுமதி அளிக்கப்பட்டது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 044/99 | KRISHNAMOORTHY. G | பழைய பேருந்து நிலையம் | 5 | போதிய இடம் இல்லததாலும் ஒரே குத்தகைதாரர் என்பதால் இரண்டு கடைகளில் கடை எண்.4 மட்டும் அனுமதி வழங்கப்பட்டு கடை எண்.5–க்கு இடம் வழங்கப்படவில்லை. |
| 5 | 044/100 | SHEIK MOHIDEEN | பழைய பேருந்து நிலையம் | 6 | தற்காலிமாக கடை வைத்து நடத்த அனுமதி அளிக்கப்பட்டது |
| 6 | 044/101 | SURENDRA BABU. B | பழைய பேருந்து நிலையம் | 7 | தற்காலிமாக கடை வைத்து நடத்த அனுமதி அளிக்கப்பட்டது |
| 7 | 044/102 | ARUMUGAM. S | பழைய பேருந்து நிலையம் | 8 | தற்காலிமாக கடை வைத்து நடத்த அனுமதி அளிக்கப்பட்டது |
| 8 | 044/103 | ARUMUGAM. S | பழைய பேருந்து நிலையம் | 9 | போதிய இடம் இல்லததாலும் ஒரே குத்தகைதாரர் என்பதால் இரண்டு கடைகளில் கடை எண்.8 மட்டும் அனுமதி வழங்கப்பட்டு கடை எண்.9–க்கு இடம் வழங்கப்படவில்லை. |
| 9 | 044/104 | RAJESHWARAN | பழைய பேருந்து நிலையம் | 12 | குத்தகைதாரர் இறந்து விட்டதால் இடம் வழங்கப்படவில்லை. |
| 10 | 044/105 | RAVANAPPA NAIDU | பழைய பேருந்து நிலையம் | 13 | தற்காலிமாக கடை வைத்து நட்த்த அனுமதி அளிக்கப்பட்டது |

மேற்காணும் கடைகளில் கடை எண்.2, 4, 6, 7, 8 மற்றும் 13 ஆகிய கடைகளுக்கு புதியதாக கடை கட்டி முடிக்கப்படும் காலம் வரை மட்டுமே தற்காலிகமாக இடம் ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது. கடை எண். 3, 5, 9 மற்றும் 12 ஆகிய கடைகளுக்கு இடம் ஒதுக்கீடு செய்து வழங்கப்படவில்லை.

ஒதுக்கீடு செய்து வழங்கப்படாத கடைகளுக்கு ஜூலை 2021 வரை கீழ்கண்ட நிலுவை உள்ளது.

| வ. எண் | வரி வதிப்பு எண் | பெயர் | இடம் | கடை எண் | 31.07.21 வரை நிலுவை கேட்பு | GST | மொத்தம் (6+7) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 60 | 044/97 | SEKAR.K | பழைய பேருந்து நிலையம் | 3 | 2700 | 486 | 3186 |
| 62 | 044/99 | KRISHNAMOORTHY. G | பழைய பேருந்து நிலையம் | 4 | - | - | - |
| 63 | 044/103 | ARUMUGAM. S | பழைய பேருந்து நிலையம் | 9 | - | - | - |
| 64 | 044/104 | RAJESHWARAN | பழைய பேருந்து நிலையம் | 12 | 2700 | 486 | 3186 |

கடை எண். 3, 5, 9 மற்றும் 12 ஆகிய கடைகளுக்கு கீழ் கண்ட விவரப்படி குத்தகை வைப்புத் தொகை காலம் கடந்த குத்தகை வைப்புத் தொகை பதிவேட்டில் உள்ளது.

| வ. எண் | கடை எண். | பெயர் | இடம் | வைப்பு தொகை பதிவேடு ஆண்டு | வைப்பு தொகை செலுத்தி ஆண்டு | வைப்பு தொகை பதிவேடு பக்கம் எண்/ வ.எண் | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | 3 | SEKAR.K | பழைய பேருந்து நிலையம் | | | | |
| | | | | 2019–2020 | 15–16 | 07 / 77 | 1322 |
| | | | | | | 07 / 78 | 1536 |
| | | | | 2021–2022 | 2018–2019 | 28 / 119 | 5904 |
| | | | | | | | 8772 |
| 2 | 12 | RAJESHWARAN | பழைய பேருந்து நிலையம் | 1989–2005 | 2002–2003 | 35 / 2553 | 270 |
| | | | | | | 36 / 2572 | 400 |
| | | | | 2019–2020 | 2015–2016 | 06 / 71 | 816 |
| | | | | | | 06 / 72 | 936 |
| | | | | 2021–2022 | 2018–2019 | 17 / 84 | 9024 |

வ.எண் 1 முதல் 2 வரை உள்ள காலம் கடந்த குத்தகை வைப்புத் தொகையினை ஜூலை 2021 வரை குத்தகைதாரர்கள் செலுத்த வேண்டிய நிலுவை தொகைக்கு ஈடுசெய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே, கடை எண். 3, 5, 9 மற்றும் 12 ஆகிய கடைகளுக்கு இடம் ஒதுக்கீடு செய்து வழங்கப்படாத காலமான ஆகஸ்ட 2021 முதல் மார்ச் 2022 வரை கேட்புத் தொகையினை தள்ளுபடி செய்து மேற்கண்ட கடைகளை குத்தகை இனங்களிலிருந்து நீக்கம் செயய்வும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. கடை எண். 3, 5, 9 மற்றும் 12 ஆகிய கடைகளுக்கு இடம் ஒதுக்கீடு செய்து வழங்கப்படாத காலமான ஆகஸ்ட் 2021 முதல் மார்ச் 2022 வரை கேட்பினை தள்ளுபடி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. கடை எண். 3, 5, 9 மற்றும் 12 ஆகிய கடைகளை குத்தகை இனங்களிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(1362/2021/அ1)

**14.** இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் கீழ்காணும் கடைகளுக்கு 31.03.2021-ல் குத்தகை உரிமம் முடிவடைந்ததை தொடர்ந்து 01.04.2021 முதல் குத்தகை உரிமம் புதுப்பிக்க நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி.4) அரசாணை (இருபதாண்டுகள்) எண்.147, நாள்.30.12.2000-ன்படியும் மற்றும் அரசாணை நிலை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03-07-2007-ன்படியும் கீழ்காணும் குத்தகைதார்கள் 01.04.2021 முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் புதுப்பித்துக்கொள்ள குத்தகை உரிமம் நீட்டிப்பு கட்டணம் மற்றும் வாடகை உயர்வுக்கான 12 மாத கூடுதல் வைப்புத் தொகையினை செலுத்தி குத்தகை உரிமத்தினை புதுப்பித்துக்கொள்ள பல முறை அறிவிப்பு கடிதம் மூலமாகவும் நேரிலும் தெரிவித்து தொகை செலுத்த கால அவகாசம் வழங்கப்பட்டது.

ஆனால் குத்தகை நிலுவை வாடகை, குத்தகை உரிமம் நீட்டிப் கட்டணம் மற்றும் கூடுதல் வைப்பு தொகை செலுத்தப்படாத காரணத்தினால் கடையினை கடந்த டிசம்பர் 2021-ல் பூட்டி சீல் வைக்கப்பட்டது. கடையினை பூட்டி சீல் வைக்கப்பட்ட நிலையிலும் குத்தகை நிலுவை வாடகை, 01.04.2021 முதல் குத்தகை உரிமம் நீட்டிப் கட்டணம் மற்றும் கூடுதல் வைப்பு தொகை செலுத்தி குத்தகையினை புதுப்பித்துக் கொள்ள மீண்டும் கால அவகாசம் அளித்து அறிவிப்பு கடிதம் மூலமாகவும் நேரிலும் தெரிவிக்கப்பட்டது.

| வ.எண் | வரி வதிப்பு எண் | பெயர் | இடம் | கடை எண் | நிலுவை கேட்பு | GST | மொத்தம் | மாத வாடகை | 15% | 01.04.21 முதல் வாடகை | கூடுதல் வைப்பு தொகை | புதுப்பித்தால் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 1 | 044/58 | MUTHUGOVINDA RAJAN .C | புதிய பேருந்து நிலையம் | 58 | 170000 | 30600 | 200600 | 5000 | 750 | 5750 | 9000 | 1000 |
| 2 | 044/807 | MUTHAMMAL.A | புதிய பேருந்து நிலையம் | 67 | 80000 | 14400 | 94400 | 5000 | 750 | 5750 | 9000 | 1000 |
| 3 | 044/68 | SIVAKUMAR.P | புதிய பேருந்து நிலையம் | 68 | 170000 | 30600 | 200600 | 5000 | 750 | 5750 | 9000 | 1000 |

மேற்காணும் கடைகளில் கடை எண்.67 மற்றும் 68 ஆகிய குத்தகைதாரர்கள் தங்களுக்கு கடையினை தொடந்து நடத்த விருப்பம் இல்லை என தெரிவித்து கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதாகவும் வாடகை நிலுவையினை கடைக்கு செலுத்தியுள்ள வைப்பு தொகையில் ஈடுசெய்து கொள்ள தெரிவித்து கடிதம் அளித்துள்ளனர். கடை எண்.58 குத்தகைதார்ரிடமிருந்து ஏவ்வித பதிலும் வரபெறவில்லை மற்றும் நிலுவை தொகையும் செலுத்தப்படவில்லை.

நாளது தேதியில் செலுத்த வேண்டிய நிலுவை கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | வரி வதிப்பு எண் | பெயர் | இடம் | கடை எண் | 31.03.21 வரை நிலுவை கேட்பு | GST | மொத்தம் (6+7) | புதுப்பித்தால் கட்டணம் | 01.04.21 முதல் 31.01.22 வரை வாடகை | GST | மொத்தம் (10+11) | பெரு மொத்தம் (8+9+12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 1 | 044/58 | MUTHUGOVINDA RAJAN .C | புதிய பேருந்து நிலையம் | 58 | 170000 | 30600 | 200600 | - | - | - | - | 200600 |
| 2 | 044/807 | MUTHAMMAL.A | புதிய பேருந்து நிலையம் | 67 | - | - | - | 1000 | 57500 | 10350 | 67850 | 68850 |
| 3 | 044/68 | SIVAKUMAR.P | புதிய பேருந்து நிலையம் | 68 | 108427 | 19517 | 127944 | - | - | - | - | 127944 |

மேற்காணும் கடைகளுக்கு கீழ் கண்ட விவரப்படி குத்தகை வைப்பு தொகை காலம் கடந்த குத்தகை வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளது.

| வ.எண் | கடை எண். | பெயர் | இடம் | வைப்பு தொகை பதிவேடு ஆண்டு | வைப்பு தொகை செலுத்தி ஆண்டு | வைப்பு தொகை பதிவேடு பக்கம் எண்/ வ.எண் | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | 58 | MUTHUGOVINDA RAJAN .C | புதிய பேருந்து நிலையம் | 1989-1990 முதல் 2005-2006 வரை Vol-II | 1999-2000 | 31 / 2410 | 26448 |
| | | | | | 2000-2001 | 33 / 2481 | 19575 |
| | | | | | 2003-2004 | 38 / 2644 | 2940 |
| | | | | 2014-2015 | 2006-2007 | 40 / 95 | 3260 |
| | | | | 2019-2020 | 2015-2016 | 16 / 194 | 5748 |
| | | | | | 2015-2016 | 16 / 195 | 6612 |
| | | | | 2020-2021 | 2019-2020 | 35 / 151 9 | 9300 |
| | | | | | | | **73883** |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | 67 | MUTHAMMAL.A | புதிய பேருந்து நிலையம் | 2019-2020 | 2015-2016 | 23 / 264 | 50000 |
| | | | | 2020-2021 | 2018-2019 | 10 / 50 | 10800 |
| | | | | | | | **60800** |
| 5 | 68 | SIVAKUMAR.P | புதிய பேருந்து நிலையம் | 1989-1990 முதல் 2005-2006 வரை Vol-II | 2004-2005 | 41 / 2747 | 68500 |
| | | | | | 2005-2006 | 42 / 2771 | 20250 |
| | | | | 2014-2015 | 2007-2008 | 48 / 204 | 6750 |
| | | | | | 2007-2008 | 48 / 209 | 13492 |
| | | | | 2019-2020 | 2015-2016 | 11 / 132 | 4656 |
| | | | | | 2015-2016 | 11 / 133 | 5364 |
| | | | | 2020-2021 | 2018-2019 | 11 / 57 | 18936 |
| | | | | | | | **137948** |

வ.எண் 1 முதல் 3 வரை உள்ள காலம் கடந்த குத்தகை வைப்பு தொகையினை குத்தகைதாரர்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில் ஈடுசெய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், கடை எண். 67 மற்றும் 68 ஆகிய கடைகளின் குத்தகைதாரர்கள் தங்களுக்கு கடையினை தொடந்து நடத்த விருப்பம் இல்லை என தெரிவித்தன் பேரில் குத்தகை உரிமத்தினை ரத்து செய்யவும் மற்றும் கடை எண்.58-க்கு ஏவ்வித பதிலும் வரப்பெறாதாதலும் வாடகை நிலுவை, 01.04.2021 முதல் குத்தகை உரிமம் நீட்டிப்பு கட்டணம் மற்றும் கூடுதல் வைப்பு தொகை செலுத்தாத காரணத்தினால் பொது ஏல நிபந்தனைகளின் படி ரத்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

கடை எண்.58, 67 மற்றும் 68 ஆகிய கடைகளுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான விளம்பர செலவினம் மற்றும் இதர செலவினங்களுக்கு ரூ.100000/- வரவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. கடை எண்.67 மற்றும் 68 ஆகிய கடைகளின் குத்தகைதாரர்கள் தங்களுக்கு கடையினை தொடந்து நடத்த விருப்பம் இல்லை என தெரிவித்தன் பேரில் குத்தகை உரிமத்தினை ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. கடை எண்.58-க்கு எவ்வித பதிலும் வரப்பெறாத்தாலும் வாடகை நிலுவை, 01.04.2021 முதல் குத்தகை உரிமம் நீட்டிப்பு கட்டணம் மற்றும் கூடுதல் வைப்பு தொகை செலுத்தாத காரணத்தினால் பொது ஏல நிபந்தனைகளின் படி ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
4. கடை எண்.58, 67 மற்றும் 68 ஆகிய கடைகளுக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும், அதற்கான விளம்பர செலவினம் மற்றும் இதர செவினங்களுக்கு ரூ.100000/- வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1362/2021/அ1)

**15.** இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய விரைவு பேருந்து நிலையத்தில் கீழ்காணும் கடைகளுக்கு 31.03.2021–ல் குத்தகை உரிமம் முடிவடைந்ததை தொடர்ந்து 01.04.2021 முதல் குத்தகை உரிமம் புதுப்பிக்க நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நநி.4) அரசாணை (இருபதாண்டுகள்) எண்.147, நாள்.30.12.2000–ன்படியும் மற்றும் அரசாணை நிலை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03–07–2007–ன்படியும் கீழ்காணும் கடைகாரர்கள் அரசாணை நிபந்தனைகள் நிறைவு செய்துள்ளபடியால் 01.04.2021 முதல் மேலும் மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் புதுப்பித்துக்கொள்ள குத்தகை உரிமம் நீட்டிப்பு கட்டணம் மற்றும் வாடகை உயர்வுக்கான 12 மாத கூடுதல் வைப்புத் தொகையினை செலுத்தி குத்தகை உரிமத்தினை புதுப்பித்துகொள்ள பல முறை அறிவிப்பு கடிதம் மூலமாகவும் மற்றும் நேரிலும் தெரிவிக்கப்பட்டும் தொகை செலுத்த கால அவகாசம் வழங்கப்பட்டது.

ஆனால் குத்தகை நிலுவை வாடகை, குத்தகை உரிமம் நீட்டிப் கட்டணம் மற்றும் கூடுதல் வைப்பு தொகை செலுத்தப்படாத காரணத்தினால் கடையினை கடந்த டிசம்பர் 2021–ல் பூட்டி சீல் வைக்கப்பட்டது. கடையினை பூட்டி சீல் வைக்கப்பட்ட நிலையிலும் குத்தகை நிலுவை வாடகை, 01.04.2021 முதல் குத்தகை உரிமம் நீட்டிப் கட்டணம் மற்றும் கூடுதல் வைப்பு தொகை செலுத்தி குத்தகையினை புதுப்பித்துக் கொள்ள மீண்டும் அறிவிப்பு கடிதம் மூலமாகவும் மற்றும் நேரிலும் தெரிவிக்கப்பட்டது.

| வ.எண் | வரி வதிப்பு எண் | பெயர் | இடம் | கடை எண் | நிலுவை கேட்பு | GST | மொத்தம் | மாத வாடகை | 15% | 01.04.21 முதல் வாடகை | கூடுதல் வைப்பு தொகை | புதுப்பித்தால் கட்டணம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 1 | 044/113 | MANORANJITHAM | பழைய விரைவு பேருந்து நிலையம் | 6 | 97920 | 17612 | 115532 | 2880 | 432 | 3312 | 5184 | 1000 |

மேற்காணும் கடை எண்.6 குத்தகைதாரரிடமிருந்து ஏவ்வித பதிலும் வரபெறவில்லை மற்றும் நிலுவை தொகையும் செலுத்தப்படவில்லை.

நாளது தேதியில் செலுத்த வேண்டிய நிலுவை கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ.எண் | வரி வதிப்பு எண் | பெயர் | இடம் | கடை எண் | 31.03.21 வரை நிலுவை கேட்பு | GST | மொத்தம் (6+7) | புதுப்பித்தால் கட்டணம் | 01.04.21 முதல் 31.01.22 வரை வாடகை | GST | மொத்தம் (10+11) | பெரு மொத்தம் (8+9+12) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 3 | 044/113 | MANO RANJITHAM | பழைய விரைவு பேருந்து நிலையம் | 6 | 97920 | 17612 | 115532 | - | - | - | - | - |

மேற்காணும் கடைகளுக்கு கீழ் கண்ட விவரப்படி குத்தகை வைப்பு தொகை காலம் கடந்த குத்தகை வைப்பு தொகை பதிவேட்டில் உள்ளது.

| வ. எண் | கடை எண். | பெயர் | இடம் | வைப்பு தொகை பதிவேடு ஆண்டு | வைப்பு தொகை செலுத்தி ஆண்டு | வைப்பு தொகை பதிவேடு பக்கம் எண்/ வ.எண் | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 3 | 6 | MANORANJITHAM | பழைய விரைவு பேருந்து நிலையம் | 1989-1990 முதல் 2005-2006 வரை Vol-II | 2003-2004 | 35 / 2540 | 795 |
| | | | | | | 38 / 2631 | 740 |
| | | | | 2019-2020 | 2015-2016 | 11 / 124 | 1500 |
| | | | | | 2015-2016 | 11 / 125 | 1728 |
| | | | | 2020-2021 | 2019-2020 | 39 / 173 | 21372 |
| | | | | | | | **25340** |

மேற்காணும் கடைக்கு காலம் கடந்த குத்தகை வைப்புத் தொகையினை குத்தகைதாரர்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையில் ஈடுசெய்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், கடை எண்.6-ன் குத்தகைதாரரிடமிருந்து எவ்வித பதிலும் வரப்பெறாத்தாலும் வாடகை நிலுவை, 01.04.2021 முதல் குத்தகை உரிமம் நீட்டிப்பு கட்டணம் மற்றும் கூடுதல் வைப்பு தொகை செலுத்தாத காரணத்தினால் பொது ஏல நிபந்தனைகளின் படி ரத்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

கடை எண்.6-ரினை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. கடை எண்.6-க்கு ஏவ்வித பதிலும் வரப்பொறததாலும் வாடகை நிலுவை, 01.04.2021 முதல் குத்தகை உரிமம் நீட்டிப்பு கட்டணம் மற்றும் கூடுதல் வைப்புத் தொகை செலுத்தாத காரணத்தினால் பொது ஏல நிபந்தனைகளின் படி ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்..

(1362/2021/அ1)

**16.** இந்நகராட்சி கணினி பிரிவு, பொது பிரிவு, பொதுசுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவுகளில் இயங்கி வரும் Canon IR 2202N, IR2202 ஜெராக்ஸ் மிஷினில் மாதாந்திர பராமரிப்பு பணின்போது அடிக்கடி உதிரி பாகங்கள் பழுதடைந்துள்ளதால் அவற்றினை புதியதாக மாற்ற கோரி விலைப்புள்ளிகள் 19.01.2022 கோரப்பட்டது. எனவே, கீழ்கண்ட விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | நிறுவனம் | பணியின் விவரம் | எண்ணிக்கை | மொத்தம் தொகை |
|---|---|---|---|---|
| 1. | Excite Inc, Pondicherry | Canon NPG 59 Drum Unit | 16100 | 53600/- |
| | | Fixing Film Assembly (FMI-B335-000) | 13500 | |
| | | Roller Pleasure (FE3-3258-000) | 4500 | |
| | | Side Tray Spares | 2900 | |
| | | Cover Fixing Front (FE3-3253-000) | 950 | |
| | | Gear 27T (FE3-3237) | 750 | |
| | | Gear 41T (FE3-3236-000) | 750 | |
| | | Cam (FE3-3247-000) | 650 | |
| | | Bushing (FE8-4790-000) | 450 | |
| | | Bushing (FE8-4791-000) | 450 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | Roller Paper Pickup (FL3–1352–000) | 950 | |
| | | Cable Flexible Flat (FK4–0519–000) | 950 | |
| | | Reader Flat Cable Set (4Y8–3040–000) | 950 | |
| | | Cable Flexible Flat (FK4–5393–000) | 950 | |
| | | Developing Assembly | 8800 | |
| 2. | Syscon System, Pondicherry | Canon NPG 59 Drum Unit | 17500 | 65250/- |
| | | Fixing Film Assemply (FMI–B335–000) | 14900 | |
| | | Roller Preasure (FE3–3258–000) | 10500 | |
| | | Side Tray Spares | 5800 | |
| | | Cover Fixing Front (FE3–3253–000) | 5200 | |
| | | Gear 27T (FE3–3237) | 1200 | |
| | | Gear 41T (FE3–3236–000) | 950 | |
| | | Cam (FE3–3247–000) | 950 | |
| | | Bushing (FE8–4790–000) | 950 | |
| | | Bushing (FE8–4791–000) | 750 | |
| | | Roller Paper Pickup (FL3–1352–000) | 750 | |
| | | Cable Flexible Flat (FK4–0519–000) | 1350 | |
| | | Reader Flat Cable Set (4Y8–3040–000) | 1350 | |
| | | Cable Flexible Flat (FK4–5393–000) | 1350 | |
| | | Developing Assembly | 1350 | |
| 3. | GEM Computer, Pondicherry | Canon NPG 59 Drum Unit | 18500 | 71750/- |
| | | Fixing Film Assembly (FMI–B335–000) | 14500 | |
| | | Roller Pleasure (FE3–3258–000) | 6500 | |
| | | Side Tray Spares | 4900 | |
| | | Cover Fixing Front (FE3–3253–000) | 1950 | |
| | | Gear 27T (FE3–3237) | 1750 | |
| | | Gear 41T (FE3–3236–000) | 1750 | |
| | | Cam (FE3–3247–000) | 1750 | |
| | | Bushing (FE8–4790–000) | 900 | |
| | | Bushing (FE8–4791–000) | 950 | |
| | | Roller Paper Pickup (FL3–1352–000) | 1950 | |
| | | Cable Flexible Flat (FK4–0519–000) | 1950 | |
| | | Reader Flat Cable Set (4Y8–3040–000) | 1950 | |
| | | Cable Flexible Flat (FK4–5393–000) | 1950 | |
| | | Developing Assembly | 10500 | |

வரப்பெற்ற மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் கண்ட M/s. Excite Inc, Pondicherry அவர்களின் குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு–</u>**

அ) மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வ.எண்.1–ல் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Excite Inc, Pondicherry என்ற நிறுவனத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) பணிகளின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், மேற்காணும் செலவினம் வருவாய் நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(131020/16/ஆ5)

**17.** மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விழுப்புரம் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். ஆ6/1771/2018, நாள்.05.07.2019 கடிதத்தில் இரா.லட்சுமணன், நாடாளுமன்ற உறுப்பினர் (மாநிலங்களவை) உள்ளூர் வளர்ச்சி திட்டம் 2018-19-ன் கீழ் கீழ்க்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|---|
| 1 | விழுப்புரம் நகராட்சி வார்டு எண்.26 ராமலிங்க வள்ளலார் தெரு, சுதாகர் நகர், விழுப்புரம் தார்சாலை அமைக்கும் பணி. | 4,80,000/- |

மேற்கண்ட வார்டு எண்.26 ராமலிங்க வள்ளலார் தெருவில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் அபிவிருத்தி திட்ட நிதியின் கீழ் தார்சாலை அமைக்கப்பட்டு விட்டதால், மேற்கண்ட பணியினை மேற்கொள்ள இயலாத காரணத்தினால் பணியினை இரத்து செய்திட மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விழுப்புரம் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். (4653/2019/இ1)

**18.** விழுப்புரம் நகராட்சியில் COVID-19 தடுப்பு நடவடிக்கை மற்றும் டெங்கு நோய் தடுப்பு பணியில் DBC பணியாளர்கள் கீழ்கண்ட மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் பணிகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

1. சரஸ்வதி மகளிர் சுய உதவிக்குழு விழுப்புரம்.
2. மல்லிகை மகளிர் மேம்பாட்டு மன்றம், விழுப்புரம்.

மேற்கண்ட மகளிர் சுய உதவிக்குழுக்கள் COVID-19 தடுப்பு நடவடிக்கை மற்றும் டெங்கு நோய் தடுப்பு பணிகளில் ஈடுபடுவதால், மேலும் மூன்று மாதங்களுக்கு (ஜனவரி 2022 முதல் மார்ச் 2022 வரை) குழுக்களை பயன்படுத்தவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.15.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம். மேற்படி செலவினத்தை வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(11137/2015/எச்1)

**19.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 42 வார்டுகளில் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் பாதாள சாக்கடை கட்டணம் ஆகியவற்றுக்கான நிலுவைத் தொகைகளை வசூலிக்க தீவிர வசூல் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இறுதி அறிவிப்பு, குடிநீர் குழாய் துண்டிப்பு அறிவிப்பு மற்றும் தொழில்வரி செலுத்தக் கோரும் அறிவிப்புகள் அடங்கிய புத்தகங்கள் (90 எண்ணிக்கை) அச்சிட ஆகும் பிரிண்டிங் செலவினத் தொகை ரூ.49,500/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு-15-ன் மேற்கொண்டதை மன்றத்தின் பதிவிற்கும், ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு-15-ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத் தொகை ரூ.49,500/-ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(9094/2021/அ2)

**20.** இந்நகராட்சியில் மாவட்ட கனிம வள பவுண்டேஷன் டிரஸ்ட் நிதி (PMKKKY Scheme)-ன் கீழ் முக்தியில் கூடுதல் LPG தகனமேடை (Auto and Manual) மதிப்பீடு ரூ.44.00 இலட்சத்தில் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 17.06.2021 அன்று மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற விவரம் வருமாறு 1).M/s MHT Engineering, Chennai 2).M/s Yes Yes JEE Engineering, Chennai 3).M/s Good Care Enviro System Pvt., Ltd., அதில் வரிசை எண். 3-ல் குறிப்பிட்டுள்ள M/s Good Care Enviro System Pvt., Ltd., ஒப்பந்தப்புள்ளியிலிருந்து விலகி கொள்வதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, மீதமுள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதால் 27.07.2021 அன்று இரண்டு விலைப்புள்ளி உறைகள் பிரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. | சதவீதம் மதிப்பீட்டை விட |
|---|---|---|---|
| 1 | M/s MHT Engineering, ஒப்பந்ததாரர். | 43,59,168/- | 0.69 % அதிகம் |
| 2 | M/s Yes Yes JEE Engineering, ஒப்பந்ததாரர். | 43,79,200/- | 1.15 % அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s MHT Engineering, ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட -0.69% அதிகமாக கொடுத்துள்ளதை பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் ஏற்கலாம்.
2. திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(5416/2020/இ1)

**21.** இந்நகராட்சியின் 2021-2022-ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் 2022-2023-ஆம் ஆண்டின் உத்தே மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (367/213/பி1)

**22.** விழுப்புரம் நகராட்சி 22 முதல் 42 வரை உள்ள வார்டுகளில் 3HP முதல் 20HP வரையிலான மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் Panel Board-களில் ஏற்படும் பழுதுகளை மதிப்பீடு ரூ.4.90 இலட்சத்தில் சரி செய்யும் பணிக்கு (OHT Motors) ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 16.12.2021-ல் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீ அய்யனார் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர். | –0.09 % குறைவு |
| 2 | திரு.K.தஷ்ணாமூர்த்தி, ஒப்பந்ததாரர். | 1.37 % அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் ஸ்ரீ அய்யனார் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட **–0.09%** குறைவாக கொடுத்துள்ளதை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பணி ஆணை வழங்கியதையும், மேற்காணும் பணியினை குடிநீர் (ம) வடிகால் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். (7520/2021/இ2)

**23.** விழுப்புரம் நகராட்சியில் நகர சர்வே எண்.35,36–ல் காமராஜர் தெரு, நாயக்கன் தோப்பு என்ற இடத்தில் உள்ள பழைய கடைகளை இடித்துவிட்டு ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் தரைத்தளம் மற்றும் முதல் தளத்துடன் கூடிய 10x10 ft என்ற அளவில் 100 எண்ணிக்கை கடைகள் முன் ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளி மூலம் வைப்பு தொகை (Deposit) மற்றும் 12 மாத வாடகை முன் பணம் பெற்று அந்த தொகையை கொண்டு கட்டிடம் கட்ட நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் செ.மு.ந.க.எண்.3179/2021/இ1, நாள்.11.02.2021 வழங்கப்பட்டுள்ளது. மேலும் கடைகள் கட்டுவதற்கு முன் ஏலம் / முன் ஒப்பந்தப்புள்ளி மூலம் பெறப்படும் வைப்பு தொகை (Deposit) மற்றும் 12 மாத வாடகை முன் பணம் மூலம் பெறப்படும் தொகைக்கு மிகையாக ஏற்படும் கூடுதல் செலவினத்தை அனுமதியற்ற மனைப் பிரிவின் மூலம் வளர்ச்சி கட்டணமாக பெறப்பட்டுள்ள தொகையினை நிதி மாற்றம் கொள்ளவும், மேற்படி கட்டிடம் பயன்பாட்டிற்கு வரும் போது பெறப்படும் வாடகை தொகையினை மீள அனுமதியற்ற மனை பிரிவு வளர்ச்சி கட்டண கணக்கிற்கு ஈடு செய்யப்பட வேண்டும் என்றும் நிபந்தனையுடன் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து 04.03.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. தொடர்ந்து நடைபெற்ற முன் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளாத நிலையில் திட்டத்திற்கான கட்டுமானத்திற்கு தேவைப்படும் செலவின தொகையினை பெற இயலவில்லை. மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வைத்து, வைப்பு தொகையினை வசூல் செய்து, தொகை உறுதி செய்த பின், திட்டத்தினை செயல்படுத்தவும் மறு ஏலம் விடவும் வருவாய் பிரிவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒப்பந்தம் கோரி, தோராயமாக 11 மாதங்களுக்கு மேல் கடந்து விட்ட நிலையில் ஒப்பந்த விதிகளின்படி மேற்காணும் ஒப்பந்தத்தை இரத்து செய்தும், மேலும் நிதி ஆதாரம் கிடைக்கப் பெற்ற பின் மறு ஏலம் கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஒப்பந்ததாரருடைய வைப்பு தொகையை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(776/2021/இ1)